[திருமதி கோமதி சீனிவாசன்] [1982 ஏப்ரல் 7

உறுப்பினர்களும், 8 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) அடங்கிய கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க, சட்டமன்ற மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப் பெறவேண்டும்''.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்,

திரு. சு. பழனிச்சாமி,

திரு. எம். பிச்சை,

திரு. ஏ. பாலுச்சாமி,

திரு. செ. குப்புசாமி,

திரு. த. மாரிமுத்து,

திரு. பெ. கலியமூர்த்தி,

திரு. இரா. சு. முனிரத்தினம்,

திரு. சு. பாலன்,

திரு. ஜே. எஸ். இராசு,

திரு. இல. பலராமன்,

திருமதி டி. யசோதா,

திரு. மு. அம்பிகாபதி,

திரு. என். சங்கரய்யா,

திரு. ஜி. மூர்த்தி,

டாக்டர் கே. சௌரிராஜன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

(10) அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) திருத்தணி பேரூராட்சியை நகரியமாக அறிவிப்பது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவினையொட்டி செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருத்தணி பேரூராட்சியின் தற்போதைய பகுதிகள் நிறுவனக் குடியிருப்பாக இருப்பதால், அதனை ஒரு நகரியமாக அறிவிப்பதென அவை தீர்மானிக்கிறது''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) எஸ்டேட்டு தீர்வைச் சட்டம் (மத்தியச் சட்டம் 34/1953) திருத்தப்படுவதற்கு ஒப்புதல்

(2) மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின்படி, தமிழ்நாடு சட்டமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தை ஒட்டி, வேளாண்மை நிலம் குறித்த எஸ்டேட்த் தீர்வை நாடாளுமன்றம் நிறைவேற்றிய 1953-ம் ஆண்டு எஸ்டேட்டுத் தீர்வைச் சட்டத்தின்படி (மத்திய சட்டம் 34/1953) தமிழ்நாடு மாநிலத்தில் இப்போது முறைப் படுத்தப்படுகிறது என்பதாலும்;

கீழே சொல்லியுள்ளவை வேளாண்மை நிலம் குறித்த எஸ்டேட்டுத் தீர்வைக்குத் தொடர்புள்ள வரையில் அவை நாடாளுமன்றத்தில் சட்டமொன்று இயற்றுவதால் தமிழ்நாடு மாநிலத்தில் முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதும், அதற்காக மேற்சொன்ன சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதும் விரும்பத்தக்கது என இப்பேரவைக்கும் மேலவைக்கும் தோன்றுகிற படியாலும்;

(1) எஸ்டேட்டுத் தீர்வைக்குரிய விலக்கு வரையறையை ரூ. 50,000/-லிருந்து ரூ. 1,50,000/-க்கு உயர்த்துதல்; சொத்து மதிப்பு ரூ. 1,50,001–இல் இருந்து ரூ. 2,00,000/-வரையிலமைந்த முதல்படி நிலையில் 10 சதவீத எஸ்டேட்டு தீர்வைக்கு வகை செய்தல்;

(2) கூட்டுறவு வீட்டு வசதிச் சங்க வீடுகட்டும் திட்டத்தின் கீழ் அச்சங்க உறுப்பினர் ஒருவருக்குக் கட்டிடம் அல்லது அதன் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டால் அல்லது குத்தகைக்கு விடப்பட்டால், அவ்வுறுப்பினர் அக்கட்டிடத்தின் அல்லது அதன் ஒரு பகுதியின் உரிமையாளர் என்று கருதப்பட வேண்டும் என்பதற்கு வகை செய்தல்;

(3) இறந்தவருக்குச் சொந்தமாயிருந்த குடியிருப்பு வீடு அல்லது அதன் ஒரு பகுதி, 1957 ஆம் ஆண்டு செல்வ வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1957) அடிப்படையில் மதிப்பிடப் பட்டவாறே இது குறித்தும் மதிப்பிடப்படும்.

ஆகவே, இப்போது, அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவுக்கிணங்க, இப்பேரவை, 1953 ஆம் ஆண்டு எஸ்டேட்டுத் தீர்வைச் சட்டம் (மத்தியச் சட்டம் 34/1953) மேலே சொல்லியவற்றிற்கு 1981 மார்ச்சு 1 ஆம் தேதியிலிருந்து வகை செய்ய நாடாளுமன்றத்தால் திருத்தப்படலாம் என்று இதனால் தீர்மானிக்கிறது''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.